**மகளிர் திட்டம் – தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – இணைப்புக் கோட்பாடுகள் மற்றும் புதிய ஒப்பந்தம் – ஆணை வெளியிடப்பட்டது – தொண்டு நிறுவனங்களின் இணைப்புக்காலம் மாற்றம் செய்தல் புதியதாக, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகத்துடன் இணைக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் – ஊக்கத்தொகை வழங்குதல்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ( மஅதி3) துறை

அரசு ஆணை (நிலை) எண். 124 நாள் 18.7.2008.

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை நிலை எண்.155 ஊ.வ.(ம) ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 5.9.07.
2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன வாரிய 106வது கூட்டம் தீர்மானம் எண்.1311. நாள் 3.6.2008.
3. அரசாணை நிலை எண்.112, ஊ.வ.(ம) ஊ. (மஅதி3) துறை நாள் 30.6.08.
4. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், நேர்முக கடித எண்.1807/பி2/2007 நாள் 3.7.08.

**ஆணை:**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மகளிர் திட்டத்தின் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கான புதிய ஏற்பளிப்பு, இணைப்புக் கோட்பாடுகள் மற்றும் புதிய ஒப்பந்தம் செய்வது குறித்த ஆணைகள் வெளியிடப்பட்டது. அந்த அரசாணையில், தன்னார்வ தொண்டு நிறுவனங்களை இணைப்பது குறித்த வழிமுறைகள் மற்றும் அவர்கள் அளிக்கும் சேவைக்கு நிதியுதவி அளித்தல் குறித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தகுதி அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு அவற்றின் தரத்திற்கு ஏற்றவாறு இணைப்புகால அளவு வெவ்வேறாக பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| தரம் | மதிப்பீடு (50) | ஏற்பளிக்கப்படும் வருடம் |
|---|---|---|
| ஏ | 40க்கு அதிகமாக | 3 வருடங்களுக்கு |
| பி | 31–40 | 2 வருடங்களுக்கு |
| சி | 16–30 | 1 வருடத்திற்கு |
| டி | 16க்கும் குறைவாக | ஏற்பளிக்க இயலாது. |

2. நான்காவதாக படிக்கப்பட்ட நேர்முக கடிதத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைக்கேற்ப, தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்து ஏற்பளித்தல் மற்றும் ஒப்பந்தம் செய்தல் ஆகியவை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஏற்பளிப்பு தொடர்பான பொருள் 3.6.2008 அன்று நடைபெற்ற 106வது வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தகால அளவான ஒரு வருட ஏற்பளிப்பு சுய உதவி குழுக்களுக்கு அவர்களால் முழுமையான சேவையை அளிக்க இயலாது எனக்கருதப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஏற்பளிப்பு காலம் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகாலமாக இருக்கலாம் என்றும் இதற்கேற்ப தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஏற்பளிப்பு பின்வருமாறு இருக்கலாம் என்று வாரியக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

| தகுதி | ஏற்பளிப்பு காலம் |
|---|---|
| ஏ | நான்கு ஆண்டுகள் |
| பி | மூன்று ஆண்டுகள் |
| சி | இரண்டு ஆண்டுகள் |
| டி | ஏற்பளிப்பு வழங்க இயலாது |

**3.** மேலும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள், ஏற்கனவே மகளிர் திட்டத்தில் ( Non-Mahalir Thittam ) இணையாத ஆனால் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் / மகளிர் திட்டத்துடன் இணைந்த தொண்டு நிறுவனங்களின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களில் தகுதியான குழுக்களுக்கு நிதி உதவி வழங்கலாம் என்றும், கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் அவர்களால் துவக்கப்பட்டு செயலில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு தொண்டு நிறுவனம் மேற்கொள்ளும் சேவைகளுக்காக கீழ்கண்டவாறு ஊக்க தொகை வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

1) சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு ஏற்படுத்தித் தருவதற்காக, அரசாணை (நிலை) எண்.112 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 30.6.08ல் வெளியிடப்பட்ட ஆணைப்படி வழங்கப்படும் ஊக்கத் தொகை.

2) இந்த ஊக்கத்தொகை, கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் அமைக்கப்பட்ட குழுக்களுக்கு செய்யும் சேவைகளுக்காக மட்டுமே வழங்கலாம்.

3) கடந்த 4 ஆண்டுகளுக்குள் துவக்கப்பட்ட குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள ஊக்கத்தொகை வழங்கலாம்.

4) குழு அமைப்பதற்கான அமைப்பு கட்டணம் கண்காணிப்பு கட்டணம் ரூ.300/– மற்றும் பயிற்சி கட்டணம் ஆகியவற்றை மேற்கண்ட குழுவிற்கு / தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க தேவையில்லை.

**4.** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகம் அவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஏற்பளிப்பு காலத்தை மாற்றவும் ஏற்கனவே மகளிர் திட்டத்தில் இணையாத (Non-Mahalir Thittam) ஆனால் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்த தொண்டு நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய ஊக்கத் தொகை குறித்தும் அரசாணை நிலை எண்.155, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5.9.2007–ல் தகுந்த திருத்தம் வெளியிடுமாறும் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

**5.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

**(1)** தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஏற்பளிப்பு காலம் குறைந்த பட்சமாக 2 ஆண்டுகளாகவும் அதிகபட்சமாக 4 ஆண்டுகளாகவும் அமையும் வகையில் அரசாணை எண்.155 ஊ.வ. (ம) ஊ. துறை, நாள் 5.9.2007–ற்கு பின்வரும் திருத்தத்தை செய்கிறது.

| தகுதி | ஏற்பளிப்பு காலம் |
|---|---|
| ஏ | நான்கு ஆண்டுகள் |
| பி | மூன்று ஆண்டுகள் |
| சி | இரண்டு ஆண்டுகள் |
| டி | ஏற்பளிப்பு வழங்க இயலாது |

(2) ஏற்கனவே மகளிர் திட்டத்தில் இணைந்திராத ஆனால் தற்போது, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைக்க ஏற்பளிப்பு செய்யப்பட்டுள்ள, தொண்டு நிறுவனங்களுக்கு, பின்வருமாறு ஊக்கத்தொகை வழங்க அனுமதிக்கப்படுகிறது.

1) சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு ஏற்படுத்தித் தருவதற்காக, அரசாணை (நிலை) எண்.112 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 30.6.08ல் வெளியிடப்பட்ட ஆணைப்படி வழங்கப்படும் ஊக்கத் தொகை வழங்கலாம்.

2) மேலே இனம் 1–இல் குறிப்பிட்ட ஊக்கத்தொகை, கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் அமைக்கப்பட்ட குழுக்களுக்கு செய்யும் சேவைகளுக்காக மட்டுமே வழங்கலாம்.

3) கடந்த 4 ஆண்டுகளுக்குள் துவக்கப்பட்ட குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அரசாணை (நிலை) எண்.112 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 30.6.08ல் நிர்ணயித்துள்ள ஊக்கத்தொகை வழங்கலாம்.

4) கடந்த 4 ஆண்டுகளில் அமைக்கப்பட்ட சுய உதவிக்குழுக்களுக்காக, குழு அமைப்பதற்கான அமைப்பு கட்டணம், கண்காணிப்பு கட்டணம் ரூ.300/– மற்றும் பயிற்சி கட்டணம் ஆகியற்றை தொண்டு நிறுவனங்கள் / குழுக்களுக்கு வழங்கப்படமாட்டாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக்வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.